பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 22 புதன்கிழமை 08.12.2021 கதிர் 33

## இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சிகளுக்கு எதிராகப் பலாத்காரம் பிரயோகிக்க முயற்சி எடுக்கப்பட்டதாகத் தெரிவித்து நாடாளுமன்ற அமர்வை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பகிஷ்கரித்து நாடாளுமன்ற முன்றிலில் போராட்டம்

பக்கம்02

# கட்சிகளின் சுயநலத்தின் பிரகாரம் உள்ளூராட்சி சபைகள் தோற்கடிப்பு

## வரப்போகும் மோசமான நிலையைச் சுட்டிக்காட்டுகின்றார் சுரேஷ்



(இ.கலையமுதன்)

**உள்ளூராட்சி சபைகளைத் தோற்கடித்து ஆணையாளர்களின் கீழ் சபைகள் கொண்டுவரப்படுமாயின், அதைப்போல ஒரு மோசமான நிலை இருக்காது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.**

☞10

## 21 பேர் சாவு

நாட்டில் மேலும் 21 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

11 ஆண்களினதும், 10 பெண்களினதும் மரணங்கள் இவ்வாறு பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று

☞2

## சிம்பன்சிக் குரங்கின் உடல் எனக் கருதி கரை ஒதுங்கிய மனித உடலம் புதைப்பு?

### புதிய சர்சை கிளம்பியது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.08

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் சிதிலமடைந்த நிலையில் கரை ஒதுங்கிய உடலங்களில் ஒன்று சிம்பன்சி எனப்படும் மனித குரங்கினது எனக் கருதி கடற்கரையில் அது புதைக்கப்பட்டதாககங கூறப்படும் விவகாரம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது..

மனிதர்களின் உடலங்கள் பல நிர்வாண நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்கரைகளில் அடுத்தடுத்துக் கரை ஒதுங்கும் நிலையில், மருதங்கேணி பொலிஸ் பிரிவு எல்லைக்குள் கரை ஒதுங்கிய உடலம் மனிதனுடையதா அல்லது குரங்கினதா என்ற சந்தேகம் எழும் அளவிற்கு இருந்ததாகக் கூறப்படுகின்றது. அந்தச் சமயம் விலங்கு மருத்துவர் ஒருவர்

☞2

## விரைவில் மீண்டு வரும் கட்டுவன் – மயிலிட்டி வீதி

(ந.லோகதயாளன்)

கட்டுவன் – மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் தூரப் பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்குமாறு இராணுவத்தளபதிக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

பாதுகாப்பு பற்றிய ஆலோசனைக் குழுக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

☞2

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 5 கோடி ரூபா பெறுமதியான கடல் அட்டை தமிழகத்தில் மீட்பு



(ந.லோகதயாளன்)

இராமேஸ்வரம், வேதாளைப் பகுதியில் இருந்து இலங்கைக்குக் கடத்துவதற்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 5 கோடி ரூபா மதிப்பிலான

☞2

## இரண்டரை மணி நேரம் சிவகரனிடம் விசாரணை



(மன்னார் நிருபர்)

கொழும்பு பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வவுனியா பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர்

☞10

## பிரியந்த படுகொலை சாதாரண சம்பவமா?

## பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் உடன் மன்னிப்புக் கோர வேண்டும்

### இலங்கை அரசு வலியுறுத்து



பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்.

– இவ்வாறு இலங்கை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் அறிவிப்பொன்று சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. இலங்கையரான பிரியந்த குமார கொடூரமான முறையில்

☞2

## நல்லூர் பிரதேச சபை பாதீடு நேற்று வெற்றி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ. 08

யாழ்.நல்லூர் பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டம் 4 மேலதிகமாக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நேற்று தவிசாளர் ப. மயூரன் தலைமையிலான கூட்டத்தில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 12 வாக்குகளும், எதிராக 4 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் அது 4 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## வல்வெட்டித்துறை நகர சபைக்கான தலைவர் தெரிவு இந்த மாதம் 15இல்

(ந.லோகதயாளன்)

வல்வெட்டித்துறை நகர சபைக்கான தலைவர் தெரிவு எதிர்வரும் 15ஆம் திகதி சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் 2022ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டம் நவம்பர் மாதம் இரு தடவை தோற்கடிக்கப்பட்டதால் அதன் தலைவர் செல்வேந்திரா பதவியிழந்தார்.

இந்த இடத்துக்கே புதியவரை நியமிப்பதற்கான தேர்வு எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் என வடக்கு

☞2

## நாட்டையும் மீட்டோம்; வீட்டையும் காத்தோம்

### கடந்த நல்லாட்சி தொடர்பில் சபையில் ரணில் எடுத்துரைப்பு



எங்கள் ஆட்சியில் நாம் நாட்டுப் பொருளாதாரத்தை மட்டுமல்ல வீட்டுப்பொருளாதாரத்தையும் பாதுகாத்தோம். மக்களுக்கு மூவேளைகளும் சாப்பிடக்கூடிய நிலைமை காணப்பட்டது. சமையல் அறையின் பாதுகாப்புக் கூட உறுதிப்படுத்தப்பட்டது. அங்கு வெடிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை.

–இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

2015 முதல் 2019 வரை நாட்டு பொருளாதாரம் எப்படி இருந்தது என ஆளுங்கட்சியினர் எழுப்பிய

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்தியமை தெரிந்ததுதான்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்களுடன் நிற்கவில்லை என்ற ஆதங்கம் ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் பலமாக இருப்பதாகத் தெரிகின்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அன்றைய தினம் சுமந்திரன் நாடாளுமன்றம் போகவில்லை. மன்னாரில் திருக்கேதீஸ்வரம் மற்றும் மணல் அகழ்வு தொடர்பான இரண்டு வழக்குகளில் அவர் முன்னிலையாகி வாதிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையிடமிருந்து போராட்டம் பற்றிய தகவல் சுமந்திரனுக்குத் தெரிவிக்கப்பட்ட போது, தாம் மன்னார் வழக்குக்குச் சென்று கொண்டிருக்கின்றமையால், அது குறித்து கூட்டமைப்புக் கொறடாவான சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பியுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யும்படி அவர் கூறியிருக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை சாள்ஸ் நிர்மலநாதனுடன் தொடர்பு கொண்டதா, இல்லையா என்பது தெரியவில்லை.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றுக்கு வராவிட்டால், அந்த நேரத்தை மற்றைய எதிர்க்கட்சிகளான தங்களுக்கு வழங்குங்கள் என்று வலியுறுத்தி அந்த நேரத்தை கூட்டமைப்பு பயன்படுத்த கூட்டமைப்புக் கொறடாவான சாள்ஸ் நிர்மலநாதன் துடிப்பாக முன்னின்று ஏற்பாடு செய்தார் எனக் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் எதிரணியினருக்கு எதிராகப் பலாத்காரம் பிரயோகிக்கப்படுகின்றமையை எதிர்க்கும் நடவடிக்கையில் கூட்டமைப்பு தங்களுடன் நிற்கவில்லை, மாறாக தாங்கள் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்தமையைத் தனக்குச் சாதகமாகக் கூட்டமைப்பு பயன்படுத்தியது என்றெல்லாம் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ஒருவர் நேற்று தொலைபேசியில் நீண்ட நேரம் 'புராணம்' பாடினார்.

இந்த விடயத்தில் கூட்டமைப்பு பிரதான எதிர்க்கட்சியுடன் நிற்காவிட்டால் நாளைக்குக் கூட்டமைப்புக்கு இது போன்ற ஒரு பிரச்சினை வந்தால், பக்கத்துணையே இல்லை என்றார் அவர்.

சஜித் பிரேமதாஸா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றுக்கு வெளியில் நிற்க, சபைக்குள் வீடமைப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு பற்றிய விவாதம் நடந்ததாம். அதில் பேசிய தமிழ்க் கூட்டமைப்பின் கொறடா சாள்ஸ் நிர்மலநாதன் சஜித்தையும் ஒரு பிடி பிடித்திருக்கின்றார் என்றார் அந்த எம்.பி.

அப்படி என்ன சாள்ஸ் நிர்மலநாதன் கூறினார் என அவரிடம் கேட்டேன்.

"நாங்களும் வெளியில் இருந்தமையால் முழுமையாக அந்தப் பேச்சைச் செவிமடுக்கவில்லை. சஜித் அமைச்சராக இருந்த போது வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை, பெரிய குறைபாடுகள் என்று எங்கள் தலைவரை (சஜித்தை) வாங்கித் தள்ளியிருக்கின்றார் கூட்டமைப்புக் கொறடா. அவர் தொடர்பில் எங்கள் கட்சி (ஐக்கிய மக்கள் சக்தி) உத்தியோக பூர்வமாகத் தமிழ்க் கூட்டமைப்புத் தலைமையிடம் முறைப்பாடு செய்ய உள்ளது." – என்றார் அவர்.

"சஜித் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல வீடமைப்புத் திட்டங்களினால் பல ஆயிரம் வடக்குக் குடியிருப்பாளர்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை நாமும் அறிந்திருந்தோம். அது சாள்ஸ் நிர்மலநாதனின் கருத்து மட்டுமல்ல, வடக்கு எம்.பிக்கள் பலரின் கருத்தும் அதுதான் என்று நினைக்கிறேன். எது, எப்படி என்றாலும் கட்சி ரீதியாக நீங்கள் முறைப்பாடு செய்வது என்றால் முறைப்பாடு செய்யுங்கள். நல்லதுதானே!" – என்று கூறி தொலைபேசியை வைத்தேன்.

ஏதோ இங்கு கூட்டமைப்பு ஒழுங்குமுறையான கட்டமைப்பாக இயங்குவது போலவும், முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுப்பதால் பயன்கிட்டும் என்ற மாதிரியும் நம்பும் அந்த தென்னிலங்கை எம்.பியை நினைத்த போது எனக்குச் சிரிப்பாகவும் பாவமாகவும் இருந்தது.

இன்றைய நிலைவரப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். கொறடாவாக இயங்குபவர் சாள்ஸ் நிர்மலநாதன். இருவரையுமே எனக்கு நன்கு தெரியும். ஆனால், இரண்டு பேரும் ஆளை ஆள் பார்த்து, முகம் கொடுத்து, மனம் விட்டு 'ஹலோ' சொல்லிப் பேசி ஒரு வருடம் இருக்குமோ தெரியவில்லை. அண்மைக் காலத்தில் இவர் அவருக்கோ, அவர் இவருக்கோ தொலைபேசி அழைப்பு எடுத்துப் பேசியிருப்பர் என்று நம்பும் நிலையும் இல்லை.

என் இந்தக் கருத்தை இருவரில் ஒருவர் தெளிவுபடுத்தினால் அதனை அப்படியே இங்கு தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

இம்முறை நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பு 10ஆம் திகதி. அது முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

ஏற்கனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் எம்.பிக்கள் தத்தமது கட்சிகளின் முடிவுக்கு மாறாக வரவு – செலவுத் திட்டத்தின் முன்னைய வாசிப்பின் போது அதனை ஆதரித்து வாக்களித்து, அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியமை தெரிந்ததே.

அதே நிலைமை, தமது கூட்டமைப்புக்கும் வந்து விடக் கூடாது என்பதில் சம்பந்தன் மிக எச்சரிக்கையாக இருக்கின்றார் எனத் தெரிகின்றது. தமது தரப்பில் ஓரிருவர் (குறைந்தது ஒருவர்) வரவு – செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிக்காமல் விடுவதற்கு தீர்மானித்திருக்கின்றார் என்ற சந்தேகம் சம்பந்தனுக்கு இருப்பதாக அறிய வருகின்றது. கூட்டமைப்பின் பத்து எம்.பிக்களையும் சபைக்கு வரப் பண்ணி, எதிர்த்து வாக்களிக்கச் செய்வதில் அவர் தீர்க்கமாக இருக்கின்றார்.

அதைச் செய்விப்பதற்காகவேனும் தமது கட்சிக் கொறடாவுடன் அவர் பேசிக் கதைத்துச் செயற்படுவாரோ தெரியவில்லை. பார்ப்போம்.

– மின்னல் –

## இலங்கைக்கு கடத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடல் அட்டைகள் தமிழகப் பொலிஸாரால் அதிரடியாகக் கைப்பற்றப்பட்டுள்ளது.

மண்டபம் அடுத்துள்ள வேதாளை பகுதியில் அல்லாபிச்சை என்பவரது தோப்பில் இலங்கைக்குக் கடத்துவதற்காக பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன எனத் தமிழகக் கடலோரக் காவல் குழுமப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற தமிழகக் கடலோரக் காவல் குழுமப் பொலிஸார் அல்லாபிச்சை என்பவர் தோப்பில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அட்டைகள் அனைத்தையும் பறிமுதல் செய்தனர்.

குற்றவாளிகளைத் தேடி சென்றபோது குற்றவாளிகள் யாரும் இல்லாததால் அட்டையை மட்டும் கைப்பற்றி வனத்துறையிடம் ஒப்படைத்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கடலட்டையின் சர்வதேச மதிப்பு சுமார் 5 கோடி ரூபாவாக இருக்கும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கடந்த ஒரு மாத காலமாக இப்பகுதியில் பலத்த மழை பெய்து வந்த சூழலில் கடல் அட்டைகள் இலங்கைக்குக் கடத்திச் செல்வது குறைந்து வந்த நிலையில் தற்போது இராமேஸ்வரம் மண்டபம் பகுதியில் மழை நின்று வெயில் அடிப்பதால் அட்டைகள் அனைத்தையும் காயவைத்து இலங்கைக்குக் கடத்தும் சம்பவம் தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## விரைவில் மீண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் நேற்று பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு, தற்போது பாதுகாப்புத் தரப்பினரால் கவனம் செலுத்தப்பட்டுள்ள விடயங்கள், அமைச்சர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் முன்வைக்கப்பட்டன.

இதன்போது யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், கட்டுவன் – மயிலிட்டி வீதியில் உள்ள 400 மீற்றர் வீதி இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது, இந்த வீதியை விடுவிக்க வேண்டும் என்று எடுத்துக் கூறினார். இதன்போதே ஜனாதிபதி, இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உட்பட பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதேநேரம் கட்டுவன் – மயிலிட்டி வீதியில் படையினர் 30 மீற்றர் தூரம் வேலியை நகர்த்த வேண்டுமானால் விமானப்படையினர் தமது அரணை 30 மீற்றர் பின் நகர்த்த வேண்டும் என்பதனாலேயே இந்த விடயம் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## சிம்பன்சிக் குரங்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறிய தகவலின் அடிப்படையில் அது சிம்பன்சியினுடையது எனக் கருதப்பட்டு புதைக்கப்பட்டதாக பொலிஸ் தரப்பில் இப்போது கூறப்படுகின்றது.

இருந்தபோதும், மனித உடலா அல்லது மிருக உடலா எனப் பொலிஸாருக்குச் சந்தேகம் எழும் நிலைமை காணப்பட்டால் அதனை சட்டவைத்திய அதிகாரியினதோ, வன உயிரினங்கள் திணைக்கள மருத்துவரினதோ பரிந்துரையின்றிப் புதைத்தமை சரியானதா எனத் தற்போது கேள்வி எழுப்பப்படுகின்றது.

## 21 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பிட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கொரோனாத்தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 505 ஆக உயர்வடைந்துள்ளது.

## வல்வெட்டித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வு செய்யப்பட்ட சபையில் இதுவரை இருவர் வல்வெட்டித்துறையின் நகர பிதாவாக இருந்த நிலையில் தற்போது மூன்றாவது தடவையாக நகர பிதாவுக்கான தேர்வு இடம்பெறவுள்ளது.

## நாட்டையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கேள்விக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே ரணில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அக்காலப்பகுதியில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தது. மக்களின் வருமானம் குறையவில்லை. தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இன்று அந்நிலைமை இல்லை. மக்களும் அந்தக் காலமே போதும் என தற்போது எண் ணுகின்றனர் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

அத்துடன், அரசின் அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்பிலும் சபையில் ரணில் கேள்வி எழுப்பினார்.

## பாகிஸ்தான் பாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம், சாதாரண சம்பவம் என அவர் கருத்து வெளியிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அது உண்மையெனில் அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இது தொடர்பில் அவர் இலங்கை மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும். தான் வெளியிட்ட கருத்தை மீளப்பெற வேண்டும் – என்றார்.

இது மோசமான சம்பவம் என்று சொல்ல முடியாது. உணர்ச்சியில் இது போன்ற செயல்கள் சில நேரங்களில் நடந்து விடுகின்றன என்று கூறி, இலங்கையர் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தை பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் நியாயப்படுத்தியுள்ளமை பெரும்சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.




JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அன்றாடம் நிகழும் கசப்பான நிதர்சனம். தாமதமாகிவிடும் முன் இப்போதும், எப்போதும், என்றென்றும் செயற்படுவோம்!!!."

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

காலைக்கதிர் Kalaikkathir

# கிராமப்புற குறைந்த வருமானம் ஈட்டுவோருக்காக 2024 ஆம் ஆண்டளவில் 71,110 வீடுகள் நிர்மாணம்

## பிரதமர் உத்தரவாதம்



கிராமப்புற குறைந்த வருமானம் ஈட்டுவோரின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் 'உங்களுக்கு ஒரு வீடு - நாட்டுக்கு எதிர்காலம்' வேலைத் திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டளவில் 71 ஆயிரத்து 110 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செலவின தலைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்-

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் 4 இராஜாங்க அமைச்சுக்கள் செயற்படுகின்றன.

நாம் இதுவரை 21 நகர அபிவிருத்தி திட்டங்களை நிறைவுசெய்துள்ளோம். மேலும் 52 நகர திட்டங்கள் நிறைவடையும் தருணத்தில் உள்ளன. அத்துடன் 2024ஆம் ஆண்டளவில் மேலும் 136 நகர அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம்.

பின்தங்கிய நகரங்களின் மேம்பாடு மற்றும் அழகுபடுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'நூறு நகரங்கள்' திட்டத்தின் கீழ் 117 நகரங்கள் அழகுபடுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்குள் மேலும் 100 நகரங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப்புற போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக 12 வாகன நிறுத்தகங்களை நிர்மாணிக்கும் திட்டங்களும் திட்டமிடப்பட்டுள்ளன.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்துக்கமைய ஒவ்வொரு குடும்பத்துக்கும் சகலவசதிகளுடன் கூடிய வீடொன்றை பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இதன் கீழ் நகர, கிராம, தோட்ட மற்றும் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கும் வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

நகர்ப்புற குறைந்த வசதிகளை கொண்ட மக்களுக்காக 2024ஆம் ஆண்டளவில் 50 ஆயிரம் வீடுகளின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்ய எதிர்பார்க்கிறோம். அதற்கமைய தற்போது 14 ஆயிரத்து 83 வீடுகளின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்து மக்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய 2024ஆம் ஆண்டளவில் கொழும்பு பிரதேசத்தில் காணப்படும் குறைந்த வசதிகளைக் கொண்ட மக்கள் குடியிருப்புகளை நவீன தொடர்மாடிக் குடியிருப்புகளாக மாற்றுவதும் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நடுத்தர வர்க்கத்தினருக்காக 1,108 வீடுகளை 2021ஆம் ஆண்டில் பயனாளர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் நடுத்தர வர்க்கத்தினருக்கான 13 வீட்டுத் திட்டங்களின் ஊடாக 6 ஆயிரத்து 128 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக செயற்படுத்தப்படும் இந்த வீட்டுத்திட்டங்களுக்கு அமைய, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினாலும் 3 வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையை குறிப்பிட வேண்டும். இதனூடான 928 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

அத்துடன் இந்த தொடர்மாடிக் குடியிருப்புகளின் கட்டுமானத்திற்கு இணையாக, அவற்றை முறையாகவும் திறம்படவும் ஒழுங்குபடுத்துவது முக்கியம். அதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

கிராமப்புற குறைந்த வருமானம் பெறுவோரின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, 'உங்களுக்கு ஒரு வீடு - நாட்டிற்கு எதிர்காலம்' வீட்டுத் திட்டத்தின் கீழ், நாட்டின் 14,022 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி ஆண்டுதோறும் ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டுக்குள் நிர்மாணிக்கப்படவுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 71,110 ஆகும்.

அத்துடன், 'சியபத் தொடர்மாடி குடியிருப்பு' திட்டத்தின் கீழ் 6,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தோட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை கட்டியெழுப்புவதற்காக இந்திய நிதி உதவியின் கீழ் 4,000 வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்ய முடிந்துள்ளது.

2022ஆம் ஆண்டு முதல் தோட்ட மக்களுக்காக 10,000 வீடுகளை நிர்மாணிக்கும் இந்திய நிதி உதவி திட்டமும் ஆரம்பிக்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் பிக்குமார்களின் பெற்றோருக்காக ஆரம்பிக்கப்பட்ட 'மிஹிந்து நிவஹன' திட்டத்தின் கீழ் 2,000 வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலாத் துறையின் மறுமலர்ச்சிக்காக கடற்கரைப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை பூங்காக்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், நாட்டைச் சூழவுள்ள சமுத்திர சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுப்பது தொடர்பிலும் நாம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றோம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேல் மாகாணத்தில் வெள்ளநீரை கட்டுப்படுத்துவதற்கு விசேட வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அத்திட்டம் நிறைவுசெய்யப்படும் பட்சத்தின் மேல் மாகாணத்தில் வெள்ள அபாயம் பெருமளவு குறைவடையும் என எதிர்பார்க்கின்றோம்.

உலகளாவிய கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் முழு உலகமும் பின்தங்கிய நிலைக்கு தள்ளப்பட்ட போதிலும், நகர அபிவிருத்தி, வீடமைப்பு உள்ளிட்ட எமது அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்தது என்று நம்புகின்றோம். - என பிரதமர் தெரிவித்தார்.

# கப்பம் கோரிக் கைதாகிய போலி சி.ஐ.டிக்கு மறியல்!

திருட்டு விசாரணை ஒன்றை சமாளிப்பதற்கு கப்பம் கோரி கைதாகிய போலி சி.ஐ.டி. ஒருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி உப்போடை புறநகர் பகுதி ஒன்றில் அண்மையில் நகை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதன் பிரகாரம் குறித்த திருட்டு தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை அடையாளம் கண்ட காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்று விசாரித்துள்ளனர்.

பின்னர் சந்தேகநபர் வீட்டில் இல்லாமையால் மீண்டும் வருகிறோம் எனக் கூறி அந்த இடத்தில் இருந்து சென்றுள்ள நிலையில் அதே வீட்டுக்கு சில நிமிடத்துக்கு மற்றுமொரு போலி சி.ஐ.டி என கூறப்படும் நபர் ஒருவர் சென்றுள்ளமையுடன் ரூபா 10 ஆயிரம் கப்பமாக தந்தால் பிரச்சினையை தீர்த்து தருகிறேன் என சந்தேகநபரின் பெற்றோர்களிடம் தெரிவித்துள்ளார்.

கப்பம் கோரிய போலி சி.ஐ.டி. தொடர்பில் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய அன்று இரவு காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் சென்ற பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் வைத்திருந்த அடையாள அட்டையில் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கல்விப்பணிப்பாளர் என பதவி குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபரை ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் 458 எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவு கசிவுகளைக் கண்டறிய வழிமுறைகள் அறிக்கை

## ஆய்வுக்குழு வெளியிட்டது

எரிவாயுக் கசிவை நுகர்வோர் கண்டறிய, ஒரு தனித்துவமான வாசனையுடன் கூடிய இரசாயன திரவமான எத்தில் மெர்காப்டானைச் சேர்க்குமாறு விநியோக நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக உள்நாட்டு எரிவாயு வெடிப்புகளை ஆய்வு செய்த நிபுணர்கள் குழு கூறியுள்ளது.

அந்தக் குழுவின் தலைவரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 28ஆம் திகதி வரை 458 வாயு தொடர்பான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் அவற்றில் 244 முறைப்பாடுகள் கசிவுகள் தொடர்பான முறைப்பாடுகள் எனவும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் இரசாயன மற்றும் செயன்முறைப் பொறியியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் சாந்த வல்போலகே தெரிவித்தார்.

கசிவுகளை மக்கள் அடையாளம் காண துர்நாற்றத்துடன் கூடிய இரசாயனப் பொருள் இல்லாதது கவலைக்குரிய ஒரு முக்கிய விடயமென குழு அடையாளம் கண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் காலாவதியான மற்றும் தாழ்வான ரெகுலேட்டர்கள், ஹோஸ் மற்றும் ஹோஸ் கிளிப் பயன்படுத்துவது கவலைக்குரிய மற்றொரு விடயம் என்றும் இது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என அக்குழு தெரிவித்துள்ளது.

இதுபோன்ற உள்நாட்டு விபத்துகளுக்கு வழிவகுக்கும் வீட்டு எரிவாயு கலவை மாற்றப்பட்டதா என்பதை இன்னும் ஆய்வு செய்து வருவதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது.

எனவே, எரிவாயு நிரப்பப்பட்ட மற்றும் சிறப்பு முத்திரை கொண்ட சிலிண்டர்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தக் குழு மேலும் கூறியுள்ளது.


# திருகோணமலையில் விபத்து; 26 பேர் காயம்

திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் கப்பல்துறை பகுதியில் நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது 26 பேர் காயமடைந்துள்ளனர் எனவும், காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.



விபத்து தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சுயலாப அரசியல்

கள்ளுக் கொட்டில்களில் உரையாடப்படும் ஒரு விடயம் குறித்து நாம் பேச்சில் குறிப்பிடுவது உண்டு.

"அவன் குடிகாரன் விடு... நீ, என் பிலாவிலை ஒரு போத்தல் ஊத்து...!" – என்றானாம் ஒருவன். தான் ஏதோ நல்லவன், குடிக்காதவன் போல காட்டிக் கொண்டு, மற்றையவனை 'குடிகாரன்' என்று விமர்சிப்பவன், இப்போது தன் பிலாவில் கள்ளை ஊற்று என்றானாம்.

சில அரசியல் பேச்சுகள் அப்படி அமைவதைப் பார்க்கும் போது அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

'ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி!' – என்ற மாதிரி அரசியல்வாதிகளின் பேச்சு அமைகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் உள்ளூராட்சி சபைகள் குறித்து ஒரு கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

"உள்ளூராட்சி சபைகளில் தவிசாளர்களின் வரவு – செலவுத் திட்டத்தைத் தோற்கடித்து, அதன் மூலம் சபைகள் ஆணையாளர்களின் கீழ் கொண்டு வரப்படும் சூழலை ஏற்படுத்தினால் அதைப் போல மோசமான ஒரு நிலைமை இருக்காது." – என்று அவர் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

நல்லது. இந்தக் கருத்தை யாழ். ஊடக அமையத்தில் அவர் நேற்றுக் கூறிக் கொண்டிருந்த அதேசமயம், சிங்களக் கட்சிகளுடன், அவரது கட்சியின் உறுப்பினர்களும் சேர்ந்து, அதுவரை தமிழ்க் கூட்டமைப்பின் தலைமையில் இயங்கிய வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டத்தை இரண்டாவது தடவையாகத் தோற்கடித்து, அந்த ஆட்சியை வீழ்த்தியிருக்கின்றனர்.

"உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களின் செயற்பாடுகளில் பிழைகள் கண்டு இருக்கலாம். அல்லது அவர்கள் நன்றாகச் செயற்படுகின்றார்கள் என மக்கள் மத்தியில் அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருக்கலாம். இவற்றை உடைக்க வேண்டுமாயின் அவர்களைத் தோற்கடிக்க வேண்டும். கட்சிகளின் சுயநலத்தின் அடிப்படையில் அவை தோற்கடிக்கப்படுகின்றன. தங்களின் கட்சி சார்ந்த தேவைகளுக்காகத் தோற்கடிக்கின்றார்கள்." – என்று முதலைக் கண்ணீர் விட்டிருக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

வவுனியா வடக்குப் பிரதேச சபை தமிழர்களைப் பொறுத்தவரை நெருக்கடிக்குரிய பிரதேசத்துக்குரியது. ஏனைய பிரதேச சபைகள் சிலவற்றை ஒட்டிய உடன்பாட்டின் அடிப்படையில்தான் இந்தப் பிரதேச சபையைத் தனித்துப் பெரும்பான்மையைப் பெறாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டு நடத்த, ஏனைய தமிழ்க் கட்சிகள் இதுவரை இடமளித்து அனுமதித்திருந்தன.

அதுவும், இன்றைய நிலையில் தமிழர்களின் எல்லைப்புற பிரதேசம் அது. சிங்கள ஆதிக்கம் அதிகரித்து வரும் ஆபத்து மிக்க பகுதி அது. அங்கு சுரேஷ் பிறேமச்சந்திரனின் கட்சியினரும் சேர்ந்து கூட்டமைப்பினரின் ஆட்சியைத் திட்டமிட்டு இப்போது வீழ்த்தியிருக்கின்றனர்.

அதேசமயம், அத்தகைய திட்டமிட்ட ஆட்சி கவிழ்ப்புகள் குறித்து கட்சித் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கவலை தெரிவித்திருக்கின்றார். 'அவன் குடிகாரன் விடு!' – என்று மற்றவனை விமர்சிக்கும் கதை போலத்தான் இது இருக்கின்றது.

"முதல் தடவை ஆட்சிக் கவிழ்ப்புத்தான் இது. அப்படி முதல் தடவை ஆட்சி கவிழ்ந்த பின்னர், இரண்டாவதாக அதிகாரத்துக்கு வரும் தவிசாளரையும் திருப்பிக் கவிழ்த்தால்தான் ஆணையாளர் ஆட்சி வரும். அதைத்தான் செய்யக் கூடாது என்றேன்." – என இப்போது சுரேஷ் பிரேமச்சந்திரன் விளக்கம், வியாக்கியானம் கூற முற்படலாம்.

அப்படி என்றால், தமிழ்க் கூட்டமைப்போ, பிற கட்சிகளோ அதிகாரத்தை வைத்திருக்கும் சபைகளை எல்லாம் தங்களின் கட்சியின் சுயநலத்துக்காகத் தாங்கள் கவிழ்ப்பார்கள், அந்த இடத்தில் தாங்கள் ஆட்சியை அமைப்பார்கள், அதிகாரத்துக்கு வருவார்கள், அதைக் கவிழ்த்தால் ஆணையாளர் ஆட்சி வந்து விடும், ஆகவே புதிதாக வரும் தங்கள் ஆட்சியைக் கலைக்க – கவிழ்க்க – முயலக் கூடாது என்று தத்துவம் பேசுகின்றாரா அவர்?

இவ்விடயத்தில், உள்ளூராட்சி சபை சட்டத்தைத் தவறாக அர்த்தம் பண்ணிக் கொண்டு அரசியல் கட்சிகள் சுயலாப அடிப்படையில் கொள்கை, கோட்பாடு பேசுகின்றன என்றே தோன்றுகின்றது.

# ஒமிக்ரோன் மாறுபாடு 32 பிறழ்வுகள் பதிவு!



ஒமிக்ரோன் மாறுபாட்டின் சுமார் 32 பிறழ்வுகள் இதுவரை பதிவாகியுள்ளன எனவும் இதுவரை இறப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்றும் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோன் மாறுபாடு 32 பிறழ்வுகளைக் கொண்டுள்ளது என்றும் டெல்டா மாறுபாடு 23 மற்றும் அல்பா மாறுபாடு 08 பிறழ்வுகளைக் கொண்டுள்ளன என்றும் வைத்தியர் ஜூட் ஜயமஹா தெரிவித்தார்.

இதன் விளைவாக, ஒமிக்ரோன் மாறுபாடு கடுமையான ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது எனக் குறிப்பிட்ட வைத்தியர் அதே நேரத்தில் மற்ற காரணிகளும் உள்ளன எனவும் கூறினார்.

இதேவேளை ஒமிக்ரோன் மாறுபாட்டுக்கு பூஸ்டர் டோஸ் பதிலளிக்கவில்லை என சமூக ஊடகங்களில் பொய்யான தகவல் பரப்பப்படுவதாக வைத்தியர் ஜூட் ஜயமஹா தெரிவித்தார்.

ஒமிக்ரோன் மாறுபாட்டின் வீரியம் காரணமாக கொரோனாத் தடுப்பூசியியைப் பெற்றுக் கொள்வது பயனற்றது என்ற கூற்றை மறுக்கிறேன் எனவும் அவர் கூறினார்.

தடுப்பூசிகளில் ஒருவரின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க அல்லது அன்டிபாடிகளை உருவாக்க ஸ்பைக் புரதம் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் வைத்தியர் சுட்டிக்காட்டினார்.

# ஜனவரிக்குள் கொவிட் வேகமாகப் பரவும் அரச மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை

பண்டிகைக் காலங்களில் எச்சரிக்கையுடன் செயற்படாவிட்டால் ஜனவரி மாதத்துக்குள் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் போட்டியை பார்ப்பதற்கு செல்லும் பார்வையாளர்கள் முகக்கவசங்களை அணிவது மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அச்சங்கத்தின் செயலாளர் கலாநிதி செனல் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தில் கவனக்குறைவான நடத்தை காரணமாக ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து பொதுமக்களுக்கு ஏற்கனவே அனுபவம் உள்ளது என அவர் கூறினார்.

பண்டிகைக் காலங்களில் கொரோனா தொற்றை பொதுமக்கள் அலட்சியமாக எண்ணினால் அது பரவுவதற்கு வழிவகுக்கும் என அவர் குறிப்பிட்டார்.

எனவே பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தடுப்பூசி செலுத்திக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் செனல் பெர்னாண்டோ கேட்டுக்கொண்டார்.

# பிரியந்தவின் கொலைக்கு இந்து ஒன்றியம் கண்டனம்

பாகிஸ்தான் சியால்கோட்டில், பிரியந்த குமார என்ற இலங்கை பொறியியலாளர் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு இலங்கை இந்து ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கை இந்து ஒன்றியம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலையே கண்டனம் தெரிவித்துள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

பிரியந்த குமார என்ற இளம் பொறியியலாளர் பாகிஸ்தான் சியால்கோட் பகுதியில் மிகக் கொடூரமான முறையில் அடித்தும் எரித்தும் கொல்லப்பட்டுள்ளார். மத நிந்தனையில் ஈடுபட்டார் எனக் குற்றம் சாட்டிய இஸ்லாமியர்கள் அவரை கொடும் சித்திரவதை செய்து, எரித்துக் கொன்றுள்ளனர் என அறியமுடிந்துள்ளது.

குர்ஆனின் கடும்போக்குவாத சிந்தனைகளில் இருந்து, 1947 ஆம் ஆண்டு தோன்றிய பாகிஸ்தான் நாடு, தனது தோற்றத்தின்போதே சுமார் 30 லட்சம் இந்து, சீக்கிய, பௌத்த மக்களை கொலை செய்துதான் தோன்றியது. பாகிஸ்தானாக அறிவிக்கப்பட்ட, பாரத தேசத்தின் பகுதியில் வாழ்ந்த இந்து, சீக்கிய, பௌத்த மக்கள் மீது முஸ்லிம்கள் கொடிய வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர். இதனால், 1947 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 30 லட்சம் இந்துக்கள் கொல்லப்பட்டனர். அன்றிலிருந்து சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத தேசமாக பாகிஸ்தான் உள்ளது.

பாகிஸ்தானில் உள்ள மத நிந்தனைச் சட்டத்தால் பல்லாயிரக்கணக்கான சிறுபான்மை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மத நிந்தனையைக் காரணம் காட்டி பல நூறு பேர் பாகிஸ்தானில் கொடூரமாகக் கொல்லப்படுகிறார்கள்.

இஸ்லாம் அமைதியானதொரு மார்க்கம், அதைத் தவறாகப் புரிந்து கொண்டவர்கள்தான் இப்படியான கொடூரங்களைச் செய்கின்றனர் என முஸ்லிம்களும், முஸ்லிம் அடிப்படை வாதத்துக்கு ஆதரவு கொடுக்கும் விதமாக பலர் பேசுவதையும் காணமுடிகிறது.

பிரியந்த குமாரவின் கொலையை இலங்கை வாழ் முஸ்லிம்கள் சிலர் ஆதரிப்பதை சமூக வலைத்தளங்களில் காணக் கூடியதாக உள்ளது. அவர்கள் மீது இலங்கை அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குர்ஆன் வாசகம் எழுதப்பட்ட சுவரொட்டியை கிழித்ததால் பிரியந்த கொலைசெய்யப்பட்டாரா?

## மதவாத அமைப்புக்கு தொடர்பு?

சியல்கோட்டில் இலங்கையர் படுகொலை செய்யப்பட்டமையை, 'தெஹ்ரிக் லெப்பெய்க் பாகிஸ்தான்' அமைப்பு மீதான தடையை நீக்குவதற்கான பாகிஸ்தான் அரசின் முடிவோடு தொடர்புபடுத்தக்கூடாது என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் பர்வேஸ் கட்டாக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் – சியல்கோட் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளர் பிரியந்த குமார என்பவர் ஒரு கும்பலால் அடித்து எரியூட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

குர்ஆன் வசனங்கள் பொறிக்கப்பட்ட கடும்போக்கு இஸ்லாமியக் கட்சியான 'தெஹ்ரிக் லெப்பெய்க்' பாகிஸ்தானின் போஸ்டரை பிரியந்த குமார கிழித்து குப்பைத் தொட்டியில் வீசியதாலேயே அவர் இவ்வாறு கொல்லப்பட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், பொவரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்ட பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் பர்வேஸ் கட்டாக்கிடம், ஊடகவியலாளரொருவர் பாகிஸ்தான் அரசாங்கம் குறித்த அமைப்பு மீதான தடையை நீக்கிய பின்னர் சியல்கோட் கொலை நடந்ததாகவும் இது போன்ற சம்பவங்களைத் தடுக்க அத்தகைய குழுக்களுக்கு எதிராக அரசாங்கம் 'பயனுள்ள அடக்குமுறையை' பரிசீலிக்கிறதா எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், இரண்டு பிரச்சினைகளையும் இணைக்கக் கூடாது எனத் தெரிவித்தார்.

'தெஹ்ரிக் லெப்பெய்க்' பாகிஸ்தான் என்ற குழு சமூக ஊடகங்களில் பயனர்களால் கொடூரமான சம்பவத்துடன் இணைக்கப்பட்டபோதும் அந்தக் குழு கொலையில் இருந்து விலகி அதைக் கண்டித்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள காரணங்கள் உங்களுக்கும் தெரியும் என்றும் குழந்தைகள் வளரும்போது அவர்கள் உணர்ச்சிவசப்படும்போது கொலைகள் கூட நடக்கின்றன எனத் தெரிவித்தார்.

மேலும் 'இது அந்த செயலின் விளைவு' என்று அர்த்தமல்ல என்றும் பிரியந்த குமார இஸ்லாத்தை மதிக்கவில்லை என்று இளைஞர்கள் குற்றம் சாட்டியமை திடீர் படுகொலைக்கு வழிவகுத்தது எனவும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சரின் இந்தக் கருத்து சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் கொலைக்கு கண்டனம் தெரிவித்ததோடு, நீதியை உறுதி செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானின் தற்போதைய இம்ரான் கான் அரசாங்கம் 'தெஹ்ரிக் லெப்பெய்க்' போன்ற கடும்போக்கு மதவாத அமைப்புக்கள் மீதான தடைகளை பொலிஸாரின் எதிர்ப்பையும் மீறி நீக்கியிருந்தது.

இந்த நிலையில், குர்ஆன் வசனங்கள் பொறிக்கப்பட்ட குறித்த அமைப்பின் போஸ்டரை பிரியந்த குமார கிழித்து குப்பைத் தொட்டியில் வீசியதாலேயே அவர் இவ்வாறு கொல்லப்பட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறிருப்பினும் இந்தக் கொலைக்கும் குறித்த அமைப்பிற்கும் தொடர்புள்ளதா என்பது குறித்த உத்தியோகப்பூர்வ தகவல்கள் எதுவும் இதுவரையில் வெளியாகவில்லை.

# எறிகணை மற்றும் வெடிபொருள்கள் கிளிநொச்சி வீடொன்றிலிருந்து மீட்பு



கிளிநொச்சி–உமையாள்புரம் சோலை நகர் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து பெருந்தொகையான எறிகணைகள் மற்றும் வெடி பொருள்கள் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, உமையாள்புரம்–சோலை நகர்ப் பகுதியில் எறிகணை ஒன்றை வீட்டுக்குள் வைத்து கிறைன்டரால் வெட்டியபோது, அது வெடித்துச் சிதறியது.

அதில் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையுடன் 13 வயதுடைய சிறுவன் ஒருவனும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலும், சம்பவம் இடம்பெற்ற வீட்டில் ஒரு சில வெடி பொருள்கள் அன்றைய தினம் அடையாளம் காணப்பட்டன.

இந்நிலையில், விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது, குறித்த வீட்டிலிருந்தும் வீட்டு வளவுக்குள் இருந்தும் பெருந்தொகையான வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

## உயிரிழந்த பிரியந்தவின் குடும்பத்துக்கு 25 லட்சம் ரூபா வழங்க அரசு தீர்மானம்

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு 25 லட்சம் ரூபாவை நிவாரணமாக வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

கடந்த 11 வருடங்களாக இந்நாட்டு பொருளாதாரத்துக்கு பிரியந்த குமார வழங்கிய பங்களிப்பைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யு.எஸ். எய்ட் மின் பணிப்பாளரால் புத்தாக்கதொழில்பஸ்வழங்கல்

யு.எஸ். எய்ட் மின் பணிப்பாளர் றீட் அஸ்லிமனால், தொழில் பயிற்சி அதிகாரசபையின் தலைவர் எரங்க பஸ்நாயக்கவிடம் புத்தாக்க தொழில் பஸ் ஒன்றுக்கான சாவி கையளித்து வைக்கப்பட்டது.

நாடு தழுவிய பயணத்தில், சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவுடன் செம்மையாக்கப்பட்ட தொழில் பயிற்சி அதிகாரசபையின் தொழில் பஸ்ஸானது, உலகத்தரம் வாய்ந்த தொழில்முறை,தொழில் சோதனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதற்காக இலங்கையின் தென் முனையில் உள்ள தெய்வேந்திர முனை முதல் வடக்கில் பருத்தித்துறை வரை ஆறு மாவட்டங்களில் உள்ள 21பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 600 இளைஞர் யுவதிகளிடம் சென்றடைந்த துள்ளது.

புத்தாக்க தொழில் பஸ் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்தடைந்திருந்த நிலையில், வைபவ ரீதியாக திங்கள் காலை 11 மணி அளவில் யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வின் போது இந்த பஸ் கையளிக்கப்பட்டது.

# சுண்டிக்குளம் தேசிய வனத்தில் உயிர்ப் பல்வகைமை ஆய்வுகள்







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திண்ணை குழுமம் மற்றும் சி.சி.எச். நிறுவனம் ஆகியன ஒன்றிணைந்து முன்னெடுக்கவுள்ள சுண்டிக்குளம் தேசிய வனத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கிலான உயிர் பல்வகைமை ஆய்வு முன்னெடுப்பின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை யாழ்ப்பாணம் திண்ணை விடுதியில் இடம்பெற்றது.

சி.சி.எச். நிறுவனத்தின் நிறுவுநர் ரீ.ரீ.மயூரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறி சற்குணராஜா, திண்ணை குழுமத்தின் தலைவர் ஞானம் ஜெயசீலன், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன், விவசாய பீடாதிபதி கலாநிதி எஸ். வசந்தரூபா, ஆய்வுக் குழுவின் இணைப்பாளர் பேராசிரியர் க.கஜபதி, விவசாய ஆய்வு நிலைய பணிப்பாளர் எஸ். ராஜேஸ்கண்ணா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இரட்ணம் செந்தில்மாறன், வன வள பாதுகாப்பு திணைக்கள பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். சுண்டிக்குளம் தேசிய வனத்தின் உயிர் பல்வகைமை ஆய்வின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கில் விரிவுபடுத்தக்கூடிய வாய்ப்புக்கள், சுற்றாடல் பாதுகாப்பு, சூழல் நேய அணுகுமுறைக்கான ஒன்றிணைந்த ஒத்துழைப்புக்கள், இவற்றில் சிறுவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்கள், பிராந்தியத்தில் காணப்படும் உயர்தர உயிர்பல்வகைமை தொடர்பான அறிவு விருத்தி என்பன தொடர்பில் முதலாம் கட்ட ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 214

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



S.W.R.D.பண்டாரநாயக்கா

**554. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா சமஷ்டியை ஆதரித்தாரா?**

ஜீரணிப்பது கஷ்டம்தான். ஆனால் அதுதான் அரசியல் பதவிகளுக்கான தந்திரங்கள். யார் யாரோ எல்லாம் சமஷ்டி கேட்க, அந்நேரத்தில் தமிழ் மக்கள்தான் இலங்கை என்ற ஒற்றுமையான தேசியத்தை வளர்க்க பாடுபட்டவர்கள். அன்றைய **Ceylon Morning Leader** என்ற பத்திரிகையில் மே1930 – ஜூன் 1926 வரை ஆறு கட்டுரைகளை சமஷ்டியை நியாயப்படுத்தி பண்டாரநாயக்கா எழுதினார். அது மட்டுமல்ல, பின்னாளில் அரசமைப்புச் சட்டத்தைப் பற்றிக் கருத்து கணக்குக்கு அனுப்பப்பட்ட டொனமூர் குழு முன் பண்டாரநாயக்காவின் உந்துதலால் கண்டியர்களின் சமஷ்டி கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால் தமிழ்த் தலைவர்கள் அதைக் கோரவில்லை. பண்டாரநாயக்காவை ஆதரிக்கவுமில்லை. இலங்கைத் தேசியத்தையே கோரி நின்றார்கள். அச்சமயம் அரசியல் புலமையாளரும் தொழிற்சங்கவாதியுமான ஜேம்ஸ்.ரி.ரட்ணம் பண்டாரநாயக்காவின் நம்பிக்கைக்குரிய நண்பராய் இருந்தார். அவர்கள் இருவரும் சேர்ந்து அரசியல் முற்போக்கு தேசியவாதிகள் கட்சி **(Progressive Nationalist Party)**என ஒன்றை உருவாக்கினர். அந்தக் கட்சி கூட, தமிழர் உட்பட சமஷ்டியை ஆதரித்தது மட்டுமல்லாமல் சர்வதேச பிராந்தியத்தில் இலங்கை இந்தியாவின் ஆதரவோடு இயங்க வேண்டும் என்ற கடப்பாட்டை கொண்டிருந்தனர். அவற்றை இலங்கை தேசியத்தில் முழு நம்பிக்கை கொண்ட ஜேம்ஸ்.ரி.ரட்ணம் ஆதரிக்கவில்லை.

பின்னர் வெளிப்படுத்தப்பட்டு நடத்தப்பட்ட சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தினால் அவர்களும் ஓரங்கட்டப்பட்டு அருணாசலம், ஜேம்ஸ்.ரி.ரட்ணம் போன்றோர் எல்லாரும் கூட நளின் சில்வா, நளின் சுபசிங்க போன்ற இனத்துவேச ஆராய்வாளர்களால் "பொன்னம்பலம் குடும்பமும் வெள்ளாள அரசியலும்" என்றும், தமிழர் மகாசபைதான் இலங்கையின் அரசியல் பரப்பில் தோன்றிய முதலாவது இனவாத அமைப்பு என்றும் சிலேடையும் நக்கலும் கலந்த பரப்புரைகள் செய்தார்கள். அவர்களது பதிப்புக்கள் பல முறை அச்சேற்றப்பட்டு பெரும்பான்மைச் சிங்கள, பௌத்தர்கள் மத்தியில் அவை ஆழமாகப் பாய்ச்சப்பட்டன.

ஆகவே கடந்து வந்த காலங்களைக் கணித்து தமிழ் தலைமைகள் செயற்பட வேண்டும். பரவணியாக அவர்கள் நாடாளுமன்றத்தில் சொல்லியதையே திரும்பவும் இன்றைய நிலையிலும், "நீங்கள் உள்ளக சுய நிர்ணய உரிமையில் தீர்வு தரா விட்டால் வெளிப்புறத் தீர்வை நோக்குவோம்" என்பதும், "நீங்கள் தமிழ் மக்களை தமிழ்த் தேசமாக ஏற்றுக்கொள்ளா விட்டால் ஒட்டு மொத்தமாக அழிந்து விடுவீர்கள்" என்பதும் சிங்கள பெரும்பான்மைக்கு வெட்டிப்பேச்சாகவும் மூட்டைப்பூச்சிக் கடியாகவும் இருப்பதால் தான் அவர்களும் தம் பரவணியில் "இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஓடி என்ன செய்யப் போகிறீர்கள்?" எனச் சவால் விடுகிறார்கள். இந்த சவால் நிலைகள்தானா தமிழர்களது இன்றைய நிலையிலும் தேவையானது?

எப்படியான அரசியலை தமிழ் மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்? நாடாளுமன்றத்தைக் குறி வைக்காத, அர்ப்பணிப்புள்ள ஆயுதப் போராட்டத்தை பிரபாகரன் நடத்தியும் கண்ட பலன் என்ன?

அவை கூட, தமிழ் மக்கள் நடத்திய தனிநபர் நலன்களையும் குறிவைத்து நடத்தப்பட்டவையல்லாது முற்றாகவும் முழுமையாகவும் மக்கள் நலத்தினை நோக்கமாகக் கொண்டவையல்ல. ஆரவாரங்கள், ஆர்ப்பாட்டங்களில் ஊறியவை. தனிமனித வழிபாடுகளில் நம்பிக்கை வைத்தவை. ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம், மேதகு பிரபாகரன் எனத் தொடர்ந்தவர்கள். கண்களை மூடிக்கொண்டு இவர்கள் நடத்திய அரசியலை ஆட்டு மந்தைகள் போல் பின் தொடர்ந்தவர்கள் தமிழ் மக்



ஜீ.ஜீ.பொன்னம்பலம்

கள். அவற்றினிடையே சிந்தித்து, சீர்திருத்தம் பேசியவர்கள் "துரோகிகள்" என வெளியேற்றப்பட்டார்கள்.

இனப்படுகொலையில் முடிந்த போரின் முடிவிலும் இரண்டு தேசம்; ஒரு நாடு, சர்வதேசப் போர்க் குற்ற விசாரணை முதலில் வேண்டும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் அரச படையினர் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும், சர்வஜன வாக்கெடுப்பு ஐ.நாவின் ஊடாக நடைபெறவேண்டும், அதில் தீர்வு பெறப்பட வேண்டும் என்ற அரசியலே நாடாளுமன்ற பதவிகளுக்காக கடந்த 12 வருடங்களும் நடந்து கொண்டிருக்கிறது.

ஆக, அறிவுபூர்வமான பொதுவெளி கலந்துரையாடல்கள், அரசியல் ஆய்வுகள் மூலம், புவிசார் அரசியலின் நிலைகளை ஒட்டி, முன்னெடுப்பவனவாகத் தெரியவில்லை. எத்தனையோ அரசியல் கட்டுரை ஆய்வுகளும், பந்தி பந்தியாக எழுதப்படும் அபிப்பிராயங்களும், இணைய வழி கருத்தரங்கங்களும் "மாற்று அரசியல்" ஒன்றை தமிழ் மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றே அறிவுறுத்துகின்றன. ஆனால் நடப்பதோ பரவணியான எதிர்ப்பும் இணக்கமுமான அரசியல்தான். அவையும் நாடாளுமன்ற வட்டத்துக்குள்தான்.

**555. "மாற்று அரசியல்"தான் என்ன? என்ன செய்திருக்கலாம்?**


மாற்று வழிகளில் முழுக்க முழுக்க மக்களுக்கான அரசியல் கருதி, தமது சுய நலங்களை களைந்து, எவ்வளவோ செய்திருக்கலாம். அவற்றைத் தெரிவாக ஏற்கவில்லை. 1976 இன் பின், கூட்டணியினர் நாடாளுமன்றத்தில் இருந்து விலகி, தமிழர் தேசிய சபையை அமைத்து இயங்க வேண்டும் எனத் தமிழ் இளைஞர்கள் கோரினர். அது பலத்த தாக்கத்தைத் தந்திருக்கும். இந்தியாவை உள்வாங்கியிருக்கும். ஆனால் அவர்கள் மனதில் விடுதலை இருக்கவில்லை. தொழிலோடு அரசியலும் நாடாளுமன்ற வாய்ப்புகளுமே குறியாக இருந்தன. பின்னர் "ஆயுதப் பாதை" இளைஞர்களிடையே திணிக்கப்பட்டது. 2009 வரை இது கொண்டு நடத்தப்பட்டது.

மீள சேர்க்க முடியாத சிந்திய பால் போல் அவற்றைப் பேசி பயன் ஏதும் வரப் போவதில்லை. ஆயினும் தவறுகளிலிருந்து தெளிவடைய முயல்வதற்காக சிலவற்றை பார்க்கலாம்.

அருணாசலம் அமைத்திருந்த தமிழர் மகாசபையும் அதன் பிறப்பிற்கான பின்னணிகளையும் அன்றைய தமிழ்த் தலைவர்கள் அறியாமல் இல்லை. சிங்கள மக்களை நம்புவதற்கில்லை, தமிழ் மக்கள் நாட்டிலுள்ள எல்லாத் தமிழ் மக்களோடும் இணைந்து தமிழகத்திலும் சர்வதேசத்திலும் குடியேறிய அவர்களது சகோதரரோடும் சேர்ந்து, தமிழ் அகம், தமிழ் ஈழம் அமைத்தல் வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார்கள்.

பின் டொனமூர் ஆணைக்குழு சோல்பரி அரசமைப்பிற்கான முனைப்புகள் வந்தன. அவற்றின் முன்னால் டி.எஸ். சேனநாயக்காவின் நடப்புகளும் அவர் சிங்கள மேலாண்மைக்காக கைக்கொண்டமையும் தெரிந்தே இருந்தன. ஆயினும் தமிழ் ஈழக் கோரிக்கையோ சமஷ்டியோ முன்வைக்கப்படவில்லை. இவை இல்லாமல் சோல்பரி அரசமைப்பு தமிழ் மக்களை சிறுபான்மை இனமாக சரத்து 29 இல் பாதுகாப்பு தந்தது.

சுதந்திரத்தின் பின் இந்திய வம்சாவழியினரின் குடியுரிமை பறிக்கப்பட்டது. பிரதமராக இருந்த நேரு இந்திய வம்சாவளியினர் எல்லோருமே இலங்கை பிரஜைகள் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தார். கொண்டுவரப்பட்ட இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தை அப்பொழுதைய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்



அமிர்தலிங்கம்

எதிர்த்தது. பின் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆதரவளித்தார். செல்வநாயகமும் மற்றோரும் எதிர்த்து வாக்களித்து, பின்னர் தமிழரசு கட்சி 18 டிசெம்பர் 1949ல் தோன்றியது. இவையெல்லாம் நாடாளுமன்றத்துக்கு உள்ளே நடந்த ஆதரவுமான எதிர்ப்புமான வாக்குகளே ஒழிய, அந்தச் சமயம் மலையக மக்கள் எடுத்த போராட்டத்துடன் இணைந்து, அதனைப் பலமிக்க தமிழ் எழுச்சியாக மாற்றி, நேருவை அதனில் ஈடுபட வைக்கவில்லை. அது உள்நாட்டு விவகாரமாகவே தமிழ்த் தலைவர்கள் தங்களின் நாடாளுமன்ற அரசியலாக நடத்தினர். தமிழ் மக்கள் தந்தை செல்வா கூறியது போல் "நாளை இது நமக்கும் வரலாம்" என எதிர்பார்த்தார்களே ஒழிய, நாடாளுமன்ற பலத்தால் சிங்கள மக்கள் இயற்றும் சட்டங்களை தோற்கடிக்க முடியாது என விளங்கி, இந்திய மக்களின் குடியுரிமைப் பிரச்சினையை மக்கள் எழுச்சி போராட்டமாக முன்னெடுத்து, நேருவை அவரது நிலைப்பாட்டில் நடவடிக்கை எடுக்கக் கோரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் இழந்தார்கள். பின்னர் சம்பளபாக்கிப் பிரச்சினை உருவான போது கோடீஸ்வரன் வழக்கில் சட்டம் பேசினார்கள். அதனால் அரசியல் லாபம் ஒன்றும் உருவாகவில்லை.

ஆனால் சிங்களத் தலைவர்களோ தந்திரோபாயமாக பிரித்தாண்டு கொண்டு



பிரபாகரன்

இறைமையில் குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். 1949 ஆம் ஆண்டிலிருந்து பின் நடந்தவற்றை மேற்கொண்டு பார்த்தால் வடகிழக்கு தமிழ் மக்களது போராட்டங்களில் இந்திய வம்சாவளியினரின் முழு ஆதரவும் இருக்கவில்லை. அவர்கள் வட்டுகோட்டைத் தீர்மானம் இயற்றிய போது மலைநாட்டுத்தமிழர்கள் விலத்தியே இருந்தார்கள். அந்த கொள்கைகளில் கட்சி ஆதரவுகளுக்காக காங்கிரஸ், தமிழரசு, கூட்டணி என எமது தலைவர்கள் சர்வதேசங்களில் தனித்தனி கிளைகள் அமைத்தார்களே தவிர, கட்சி அரசியல் தவிர்ந்த மக்களுக்கான "தமிழர் மகா சபை" போன்றதொன்று முன்கோடிடப்பட்டும் அமைக்கப்படவில்லை. அது சர்வதேசத் தமிழரிடையே வளர்க்கப்பட வழியில்லை.

விடுதலைப் புலிகள் தாங்கள் அதிகாரத்திலிருந்த போது வைகுந்தவாசனால் நிறுவப்பட்ட "தமிழர் ஒருங்கிணைப்பு குழுவை" தம் வசமாக்கி உலகத் தமிழரைப் பொது நிலையில் இணைக்காமல் அவர்களது அதிகார கட்டமைப்பாகவும், அவர்கள் தமிழ் மக்களுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக அதனூடு செயல்பட்டார்கள்.

அதன் சித்தாந்தத்தில் தொடர்ந்தது தான் இந்தியாவுடன் தொடங்கப்பட்ட போரும் இந்திய ஒப்பந்தத்தின் சீரழிவும்.

போரின் பின்னும் தமிழர் மகா சபையின் நோக்கத்தில் இந்தியாவின் அனுசரணையில் தமிழ் மக்களுக்கு விடிவை தேட முயற்சிகள் நடந்தாலும் அவை எல்லாம் தனிப்பட்ட அரசியல் நோக்குகளால் முன்னேறவிடப்படவில்லை. இவற்றின் வளர்ச்சிகளே இன்று அரங்கேறும் இந்தியப் பிரதமர் – கூட்டமைப்பு சந்திப்பு விவகாரம். இரண்டரை வருடங்களாக இழுபறியில் நின்ற சந்திப்பு பசில் ராஜபக்ஷ புதுடெல்லி சென்று வெறுங்கையுடன் திரும்பியது உடனேயே கூட்டமைப்பினர் சர்வதேச அரசியல் நடப்புக்களில் அதனை ஏற்று உடனடியாக பயணத்தை மேற்கொள்ளாததில் அவர்கள் இயலாத் தன்மையை – இரட்டை வேடங்களை –வேறு சில தங்கள் அரசியல் பரப்புக்களை தேர்தலை கணக்கெடுத்து திருப்திபடுத்த இயங்கியிருக்கிறார்கள் என கருத்துக்கள் தரப்படுகின்றன. சொல்லப்படும் காரணங்கள் ஒன்றுக்கு பின் முரணாக இவை கேலிகூத்தாகின்றன.

(வளரும்...)

## கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட

# வவுனியா வடக்கு சபையின் 'பட்ஜட்' மீண்டும் தோற்கடிப்பு

(வவுனியா நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 9 மேலதிக வாக்குகளால் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது. வவுனியா வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ச.தணிகாசலம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கடந்த மாதம் இடம்பெற்ற அமர்வில் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜட் முன்வைக்கப்பட்ட நிலையில் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்று அது மீளவும் முன்வைக்கப்பட்டது.

இதன்போது மக்கள் சார்பான வேலைத்திட்டத்துக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை எனப் பல்வேறு உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக இந்த வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.சஞ்சுதன் கருத்துத் தெரிவித்தார். அவரது கருத்தை தமிழர் விடுத லைக் கூட்டணியின் உறுப்பினர் முகுந்தன் வழிமொழிந்தார்.

அநேக உறுப்பினர்களின் எதிர்ப்பால் வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

அந்தவகையில் பட்ஜட்டுக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி, சுயேச்சைக் குழு ஆகியவற்றைச் சேர்ந்த 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பட்ஜட்டுக்கு ஆதரவாக தமிழ்க் கூட்ட மைப்பைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப் பினரும் வாக்களித்திருந்தனர். இதனால் 9 வாக்குகளால் 2021ஆம் ஆண்டுக்கான சபையின் பட்ஜட் இரண்டாவது முறையாகவும் தோல்வியடைந்தது.

இந்நிலையில், உள்ளூராட்சி சட்டங்களின்படி பிரதேச சபைக்கு புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளது. (100)

## கிழக்கு மாகாண புதிய பிரதம செயலாளர் கடமைகளை உத்தியோகபூர்வமாக ஏற்றார்



கிழக்கு மாகாண புதிய பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட டி.எம்.எல்.பண்டாரநாயக்க தமது கடமைகளை நேற்று (செவ்வாய்க்கிழமை) திருகோணமலையில் அமைந்ததுள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் சமயத் தலைவர்களின் ஆசீர்வாதத்தின் பின்னர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான இவர் இதற்கு முன்னர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராகப் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள திணைக்கள தலைவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

## டயகம பகுதியில் ஆற்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்பு

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டயகம ஆக்ரோயா ஆற்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த சடலம் கடந்த திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆற்றில் சடலம் மிதப்பதைக் கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் டயகம 5 பிரிவைச் சேர்ந்த 53 வயதான சாமிநாதன் தங்கேஸ்வரி என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை டயகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அடையாள இலக்கத்துடன் கூடிய பிறப்பு சான்றிதழ்கள்

### வழங்க அமைச்சரவை அனுமதி

அடையாள இலக்கத்துடன் கூடிய பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, எதிர்காலத்தில் புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும்போது இந்த அடையாள இலக்கம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அடையாள இலக்கத்தை, தேசிய அடையாள அட்டையை தயாரிக்க பயன்படுத்துவதற்கும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்துச் செயற்பாடுகளின்போது பொது மற்றும் தனியார் துறை சேவைகளை அணுகுவதற்கும் வசதியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் காத்தான்குடியில் தந்தை கைது

தனது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் செல்ல முயன்றவரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்குறித்த சம்பவமானது மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலமுனை பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இதன் போது சுமார் 13 வயது மதிக்கத்தக்க மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தை இரவு கொழும்பிற்குத் தப்பிச் செல்வதற்காக காத்தான்குடி பஸ் தரிப்பிடத்தில் மறைந்திருந்த போது காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் சென்ற பொலிஸார் குறித்த சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர் 36 வயதுடையவர் என்பதுடன் இவரது மனைவி மத்தியகிழக்கு நாடொன்றில் பணியாற்றி வருகின்றமையும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி காத்தான்குடி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக இடமாற்றப்பட்டுள்ளார்.

கைதாகிய சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## இ-சிற்றி விருதுவழங்கும் விழாவில் சிறந்த மாணவிக்கு ரூ.25 ஆயிரம்!

### கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநர் லயன் ரங்கநாதன் வழங்கினார்







இ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் கணினி, ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடநெறிகளில் டிப்ளோமா கல்வியைப் பூர்த்தி செய்த 516 மாணவர்களுக்கு விருதுவழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நிறுவனத்தின் அதிபர் தேசமானிய லயன் ரஜீவன் ஜெயச்சந்திர மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆங்கில கல்வியில் அதிசிறப்புப் பெறுபேறு பெற்ற வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலணை மத்தியகல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயிலும் ருஷாந்தினி உதயகுமார் என்ற மாணவிக்கு, நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் நிர்வாக இயக்குநருமாகிய லயன் எஸ்.ரங்கநாதன் தனது சொந்த நிதியிலிருந்து தனது தந்தை அமரர் சிவகிருஷ்ணராஜா நினைவாக 25 ஆயிரம் ரூபா பணப்பரிசிலையும் விருதுடன் வழங்கினார்.

லயன் எஸ்.ரெங்கநாதன் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருடமும் சிறந்த மாணவருக்கு 25 ஆயிரம் ரூபா தொடர்ந்தும் வழங்க உள்ளார்.

இ - சிற்றி நிறுவன நிர்வாக இயக்குநர் லயன் ஜெ.ரஜீவன், லயன் மயூரிக்கா தம்பதிகளால் லயன் ரங்கநாதன், லயன் ஹெலன் தம்பதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

இதேநேரம், என்றுமில்லாதவாறு இலங்கையின் சகல பகுதிகளிலுமுள்ள மாணவர்கள் இணையம் ஊடாக இ - சிற்றியில் டிப்ளோமா கல்வி பயின்று விருதுபெறுவதற்காகப் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாவலரின் சிந்தனையில் மலர்ந்த நம்பிக்கை நட்சத்திரம்

## சேர்.பொன்னம்பலம் இராமநாதன் குருபூசை தினம் இன்று



**- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -**
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா)

கனவு காண்பது என்பது யாவருக்கும் விருப்பமானதுதான். அந்தக் கனவுகளும் நல்ல கனவாக அமைந்துவிட்டால் அதுவே பேரானந்தமாகிவிடும். 'கனவு காணுங்கள்' என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். அண்மையில் மறைந்த மாமனிதர் அப்துல் கலாம் அவர்கள் 'கனவு காணுங்கள்' என்பதை வலியுறுத்திச் சொல்லி நின்றார். கனவு என்பது உண்மையா? பொய்யா? என்று ஆராய்ச்சிக்குள் போகவே வேண்டாம். நல்ல கனவுகளைக் கண்டால் அது நல்லதுதானே! நல்லவர்கள், வல்லவர்கள், ஞானிகள், கனவு கண்டார்கள். அவர்களின் கனவு தங்களின் நலன் சார்ந்ததாக அமையாமல் சமூக நலன் சார்ந்ததாகவே காணப்பட்டது. அப்படி அவர்கள் கண்ட கனவுகள், கனவாகமட்டுமே அமைந்துவிடாது நனவாயும் ஆகியே விட்டிருக்கிறது என்பதுதான் முக்கியமாகும். அவர்களின் கனவுகள் பலித்து அதனால் மக்களின் வாழ்வில் நல்ல பல விளைவுகள் பெருகியிருக்கின்றன.

நல்லைநகர் நாவலர் பெருமானின் வருகை சமூகத்துக்குப் பெருவெளிச்சத்தைக் காட்டியது. குறிப்பாகச் சைவ உலகுக்கும், தமிழ்ப் பாரம்பரியத்துக்கும், உரமாய், வரமாய் வாய்த்தது. அந்த அளவுக்கு இம் மண்ணில் வாழ்ந்த காலம் முழுவதும் அப்பெருமகனார் அளப்பரிய பணிகளை ஆற்றி நின்றார். அதனால் அவர் ஒரு யுகபுருஷராகவே பார்க்கப்படுகிறார். அவரால் ஒரு புதுப்பண்பாடு, ஒரு புதுக்கலாசாரமே தோற்றம் பெற்றிருக்கிறது. அவராற்றிய பணிகள் வரலாற்றில் பெரும் பொக்கிஷமாய் அமைந்திருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.



அந்தப் பெருமகன் சிந்தையில் ஒருவர் மலர்கிறார். நாவலர் பெருமான் பிறந்து இருபத்து ஒன்பது ஆண்டுகளின் பின் பிறந்தவர்தான் அவர். தனக்குப் பின் அதாவது - கால் நூற்றாண்டின் பின் பிறந்தவரை நாவலரின் கை சுட்டிக்காட்டுகின்றது. தனக்குப்பின் தன்னுடைய கனவுகளைத் தொடர்ந்து நனவாக்கிடும் வல்லமை அவரிடம் இருப்பதாகவே நாவலர் பெருமான் முழு நம்பிக்கை வைத்துவிடுகிறார். யுகபுரான நாவலர் பெருமானின் நம்பிக்கை நட்சத்திரம் யார் தெரியுமா? அவர்தான் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்.


நாவலர் பெருமான் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். அரசியல் செல்வாக்கு அற்ற குடும்பம். ஆடம்பரத்தை நாடாத குடும்பம். அன்னிய கலாசார மோகத்தினுள் ஆட்பட்டுக் கொள்ளாத குடும்பம். சைவமும், தமிழும் நிறைந்த குடும்பம். யாழ்ப்பாண மண்ணையே நிரந்தரமாக்கிக் கொண்ட குடும்பம். ஆசார அனுட்டானங்களை அகம் நிறைத்த குடும்பம். மேல்நாட்டு உடைகளை அணியாக் குடும்பம். ஆனால் நல்ல சிந்தனைகளைக் கைக்கொண்டு வாழ்ந்த குடும்பம்.

பொன்னம்பலம் இராமநாதனின் குடும்பம் அரசியல் செல்வாக்குமிக்க குடும்பம். வசதிகள் நிறைந்த குடும்பம். அன்னிய கலாசாரத்தை அணைத்து நின்ற குடும்பம். ஆங்கிலேய நடையுடையினை பாவனையை விரும்பி நின்ற குடும்பம். ஓர் உயர்ந்த மேட்டுக் குடியாக பணபலமும், செல்வாக்கும் மிக்கதாக - இலங்கையின் தலைநகராம் கொழும்பை வாழ்விடமாகக் கொண்ட குடும்பம். நினைத்ததை நினைத்தவுடன் ஆற்றி நிற்கும் அத்தனை வசதிகளும், ஆளணிகளும் கொண்ட குடும்பம் எனலாம். யாழ். மண்ணின் அடியாக அமைந்தாலும், யாழ். மண்ணில் காலூன்றாதிருந்த குடும்பம் என்றும் சொல்லலாம்.

நாவலர் பெருமானின் குடும்பத்துக்கும், அவர் வாழ்ந்த சூழலுக்கும், அவரின் சிந்தனை செயற்பாடுகளுக்கும் ஒத்துவராத ஒரு குடும்பமாய் இருந்த பொழுதும் - நாவலர் பெருமான் சிந்தையில் நம்பிக்கை நட்சத்திரமாக எப்படி பொன்னம்பலம் இராமநாதன் மலர்ந்தார் என்பது ஆச்சரியமான விடயமாய் இருக்கிறதல்லவா? இதைத்தான் தூரநோக்குப் பார்வை எனலாம். நாவலர் பெருமான் ஒரு யுகபுருஷராய் அமைந்தவர். இறையருளை மனம் நிறைத்தவர். நல்லவற்றையே நாளும் எண்ணி அதன்வழி நடப்பவர். அவரின் சிந்தனையில் இராமநாதன் அவர்கள், சைவத்துக்கும், தமிழுக்கும் நிச்சயமாகப் பெருந்துணையாகி நிற்பார் என்னும் எண்ணம் எழுந்தே நின்றது. நாவலர் பெருமானின் தீர்க்கதரிசனம் அவரின் பின்னால் - பொன்னம்பலம் இராமநாதனால் மெய்ப்பிக்கப்பட்டது என்பதை எவருமே மறுத்துரைத்து விடல் முடியாது.

22 - 05 -1879 மே மாதம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் யாழ்ப்பாணத்தின் கல்விமான்களும், உயர்மட்டத்தினருமாய் ஏறக் குறைய 3,500 பேர் கூடியிருந்தார்கள். அங்கு அந்தப் பெரிய சபை கூடியதற்கான முக்கிய காரணம், சேர். முத்துக்குமாரசாமியின் மறைவினால் ஏற்பட்ட சட்டசபைப் பிரதிநிதித்துவத்துக்கு யார் மிகவும் பொருத்தமானவர் என்னும் முக்கிய தீர்மானத்தை எடுப்பதுதான். அத்தனை பேரும் நிறைந்திருந்த கூட்டத்தில் துணிந்து ஆணித்தரமாக நாவலர் பெருமான் ஒருவரை முன்மொழிந்தார். அப்படி முன்மொழிவதற்கு அவர் பகர்ந்த மொழியினை உற்று நோக்கினால் நாவலரின் தீர்க்கதரிசனத்தை யாவரும் மனமிருத்திக் கொள்ளுவார்கள்.

"நமக்கு முன்பு இன்றுள்ள கடமை, தகைசான்ற இந்தப் பெருமகனின் (சேர். முத்துக்குமாரசாமியின்) இடத்துக்குத் தகுதிவாய்ந்த ஒருவர் யார் என்று காண்பதே. சட்டசபையிலே எமது பிரதிநிதியாக அமர்பவர் தமிழராயிருத்தல் வேண்டும். அவர் சிறந்த கல்விமானாய் விளங்க வேண்டும். உயர்ந்த கொள்கையுடையவராதல் வேண்டும். நல்ல செல்வ வசதி பெற்றிருத்தல் வேண்டும். உயர்ந்த சமூகத்தில் பழகக்கூடிய நல்ல வாய்ப்பு உடையவராதல் வேண்டும். தமது கருத்துக்களிற் சுதந்திரராயும், எந்தச் சூழலிலும் எவ்வித அச்சமுமின்றி அக்கருத்துக்களை வெளியிட வல்லவராயுமிருத்தல் வேண்டும். இவை யாவிலும் மேலாக அவர் ஆள்வோரதும், ஆளப்படுவோரதும் மதிப்பிற்கு உரியவராதல் இன்றியமையாதது. பெரியோர்களே! பொறுமையோடு ஆராய்ந்தால் மேற்கூறிய பண்புகழ் யாவும் பொருந்தியவர் பொன்னம்பல முதலியார் இராமநாதன் அவர்களே! ஐயத்துக்கு இடமே இல்லை ..... இங்குள்ளவர்களில் எவரும் திரு. இராமநாதனில் நம்பிக்கையற்றவராய் இரார் என்பது என் நம்பிக்கை" - என்று நாவலர் கூறிய வார்த்தையினை அனைவருமே ஏற்று பொன்னம்பலம் இராமநாதனுக்கே தங்களின் ஆதரவை வழங்கினார்கள் என்பது வரலாறாகும். பொன்னம்பலம் இராமநாதனைப் பற்றிய சிந்தனை நாவலரின் உள்ளத்தில் எந்த அளவு பதிந்திருந்தது என்பதும் அவர் மீதான எதிர்கால நம்பிக்கையின் திடமும் இதனால் தெள்ளெனத் தெளிவாகி நிற்கிறதல்லவா!



நாவலரின் இறுதிக் காலத்தில்த்தான் இராமநாதனைச் சட்டசபைக்குத் தெரிவுசெய்யும் கூட்டம் நடந்தது. இராமநாதன் சட்டசபையில் அமரும் பொழுது நாவலர்பெருமான் அதனைக் காணமுடியாமல் காலன் செய்துவிட்டான். ஆனால் நாவலரின் சித்தம் நிறைவேறியது.

நாவலர் பெருமானின் கைகாட்டியது பொன்னம்பலம் இராமநாதனை. அவர் நாவலரின்பின் சிறந்தவொரு கைகாட்டியாய், தமிழ்ச் சமூகத்துக்கும், சைவத்துக்கும் அமைந்தார். நாவலரைப் போல் நடையுடை பாவனையிலிருக்கா விட்டாலும், நாவலரின் மனவோட்டத்தைப் பிரதிபலிப்பவராக விளங்கினார் என்பதை மறுத்துரைத்து விட முடியாது. அப்படி அவர் பிரதிபலிக்கும் வேளை, தன் காலத்துக்கு உகந்தவாறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# நாவலரின் சிந்தனையில் மலர்ந்த நம்பிக்கை நட்சத்திரம்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாவலர் பெருமான் காலத்துக்கும் இராமநாதன் காலத்துக்கும் மாறுபாடுகளும் வேறுபாடுகளும் வந்துவிட்டன. காலத்தின் தேவைகருதி இராமநாதன் அவர்கள் செயலாற்றும் நிலை உருவானாலும், நாவலரின் கருக்களை மாற்றிவிட முயலவில்லை என்பது முக்கியமாகும். சைவத்தை அடித்தளமாக்கிய நாவலரின் கருவினைச் சிதைக்கும் வகையில் இராமநாதன் எதனையுமே ஆற்றவில்லை என்பதுதான் மிகவும் முக்கியமான விடயமாகும்.அவரின் அனைத்துப் பணிகளும் சைவத்தை முன்னிறுத்தியே அமைந்திருந்தன.

நாவலருக்கு வாய்க்காத பல வாய்ப்புகள் இராமநாதன் அவர்களுக்கு வாய்த்திருந்தன. நாவலர் ஆங்கிலம் கற்றார். வடமொழியும் கற்றார். தமிழில் பெரும் பாண்டித்தியமும் பெற்றிருந்தார். அத்துடன் அவர் நின்று விடுகிறார். அரச பதவிகளில் அவர் அமரவில்லை. அவரின் பயணம் தமிழ் நாட்டுடனும், யாழ்ப்பாணத்துடனுமே அமைந்து விடுகிறது. ஆனால் இராமநாதன் தமிழோடு பல மொழிகளில் ஆற்றலுடையவராக மிளிர்கிறார். அரசாங்கத்தின் உயர்பதவிகளை அலங்கரிக்கின்றார். அத்துடன் மிகச்சிறந்த சட்ட அறிஞராயும்,நியாயவாதியாயும் பிரகாசிக்கின்றார். பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்கின்றார். பல அமைப்புக்களிலெல்லாம் அங்கம் வகிக்கின்றார். தலைமையும் வகிக்கின்றார். நாவலரால் கை காட்டப்பட்ட இராமநாதனின் சிந்தனையும், செயற்பாடும் நாவலரின் நம்பிக்கையினை வலுவாக்கியே நின்றன என்பதுதான் மறுக்கமுடியாத உண்மை எனலாம்.

பல்கலைக்கழகம் பற்றிய சிந்தனை இராமநாதன் உள்ளத்தில் உதயமாகிறது. அதுவும் இந்துப் பல்கலைக்கழகம் என்பதுதான் அவரின் அகத்தில் எழுந்த கருவாகும். அந்தக் கருவானது நாவலருக்கு உதயமாகாது போனமைக்குக் காரணம் நாவலர் காலத்து நிலைமையே எனலாம். நாவலர் கால நிலைமை மாற்றமடையும் காலமே இராமநாதன் அவர்களின் காலமாக அமைகிறது. அதனால் காலத்துக்கு ஏற்ற வகையில் அவரின் சிந்தனையானது பல்கலைக்கழகம் என்னும் பாங்கில் சிந்திக்கத் தூண்டுகிறது. அப்படிப் புதுச் சிந்தனை எழுந்தாலும், நாவலரின் கருவான சமயம் என்பது மட்டும் மாறவில்லை என்பதுதான் முக்கியமாகும். இங்குதான் நாவலரின்



தீர்க்க தரிசனம் நிற்கிறது எனலாம்.

நாவலருக்குப் பொருளாதார வசதிகள் வாய்க்கவில்லை. ஆனால் மனம் மட்டும் தாராளமாய் இருந்தது. நாவலர் சைவத்தமிழ் பாடசாலைகளைக் காலங்கருதி அமைக்கும் கட்டாயம் ஏற்பட்டது. நாவலர் காலத்தில் அன்னியரின் செல்வாக்கால் அவர்களின் மதமும் அது தொடர்பான கல்வியும், அக்கல்வியினைப் போதிக்க அரசின் ஆதரவுடன் பாடசாலைகள் தோற்றம்பெறும் நிலையும் காணப்பட்டது. பாரம்பரியமான சைவமும், தமிழும்,கலாசாரமும் தன்னிலை இழந்துவிடாமல் காப்பாற்றும் காவலனாய் நாவலர் எழும் கட்டாயம் அக்காலம் ஏற்படுத்தியது. அதனால் அவர் காலங்கருதியே தன்னுடைய, கல்விச் சிந்தனைகளை, பாடசாலைகள் நிறுவுவதை எல்லாம் கருத்தில் இருத்தினார். இதனால் அவர் மனதில் பல்கலைக்கழகம் என்னும் எண்ணக்கருவுக்குச் சாத்தியம் இல்லாமல் போயிருக்கலாம்.




இராமநாதனின் அடிப்படை நாவலர் சிந்தனையாய் இருந்தாலும்,அவரின் செயற்பாடுகள் அனைத்துமே அவரின் காலத்தைக் கருத்திலமர்த்தியே வெளிவந்திருக்கின்றன. பெண் கல்வியில் இராமநாதன் பெரிதும் விருப்புடையவராய் காணப்பட்டார். பெண்களை வீட்டுக்குள்ளேயே வைத்திருப்பதை அவர் மனது ஏற்றுக் கொள்ளவே இல்லை. இதனால் பெண்களும் சமூகத்தில் வந்து தலை நிமிர்ந்து நிற்கவேண்டும் என்னும் சீர்திருத்த எண்ணம் அவரின் சிந்தனையில் பளிச்சிட்டது. அந்தக் கல்வியும் ஒழுக்கத்துடன், சமயம் இணைந்ததாகவே இருக்கவேண்டும் என்று அவர் கருதினார். இவ்வாறு கருதியமை பொன்னம்பலம் இராமநாதனின் மிகச் சிறந்த சமூகச் சிந்தனை என்றுதான் கொள்ளல் வேண்டும்.

'நிமிர்ந்த நடை நேர்கொண்ட பார்வை - எதற்கும் அஞ்சாத ஞானச் செருக்கும் கொண்டவளாய்' பெண்கள் வரவேண்டும் என்று பாரதியார் எண்ணினார். அவர்களைப் புதுமைப் பெண்கள் என்றே அவர் மனங் கொண்டார். பாரதியைப் போலவே இராமநாதனும் பெண்கள் விழித்து வெளிவர வேண்டும். அவர்கள் கல்வியைப் பெறுவது இன்றியமையாதது என்று எண்ணினார். அவரின் எண்ணம் மிகவும் காத்திரமான எண்ணம் அல்லவா! அந்த எண்ணத்தை எண்ணிய நிலையில் நின்றுவிடாது அதற்குச் செயல் வடிவமும் கொடுத்தார் அவர். அவரின் அத்தகைய மிகப்பெரிய சமூகச் சிந்தனையின் வடிவமாக எழுந்ததுதான் 1913 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் நாள் தோற்றம் பெற்ற மருதனார்மடம் மகளிர் கல்லூரியாகும். இன்று அக்கல்லூரி இராமநாதன் மகளிர் கல்லூரி என்னும் மகுடத்துடன் கல்வி கற்றிட விழையும் பெண்களுக்கெல்லாம் பெரும் பொக்கிஷமாய் திகழ்கிறது எனலாம்.

பெண்களை மிகவும் பெருமையுடன் எண்ணி, முதலில் அவர்களுக்கே கல்லூரியினை நிறுவிய இராமநாதன் அவர்கள் - ஆண்களுக்கென ஒரு கல்லூரியினை எட்டு ஆண்டுகளின் பின்னர் அதாவது 1921 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் ஆரம்பிக்கிறார். எல்லாம் வல்ல அந்தப் பரம்பொருளை மனமிருத்தி பரமேஸ்வராக் கல்லூரி என்னும் மகுடத்துடன் அந்தக் கல்விச் சாலை அமைகிறது. பரம்பொருளை மனமெண்ணி ஆரம்பித்தப்படியால்தான் - பரமேஸ்வராக் கல்லூரி 'பல்கலைக்கழகமாய்' மலர்ச்சி பெற்றிருக்கிறது என்று நினைத்திட வைக்கிறதல்லவா! நாவலர் பெருமானின் கந்தபுராண கலாசாரம் உருவான யாழ்ப்பாண மண்ணில் அவர் கை காட்டிய நம்பிக்கை நட்சத்திரம் பொன்னம்பலம் இராமநாதனால் உருவாக்கப்பட்ட கல்லூரி 'பல்கலைக்கழகமாய்' மலர்ந்திருக்கிறதென்றால் - நாவலரின் நம்பிக்கை ஒளிவிட்டு நிற்கிறது என்றுதானே அர்த்தமாகும்.

இராமநாதனின் - இந்துப்பல்கலைக்கழகம் அமையவேண்டும் என்னும் கனவு முழுமையாக நிறைவேறாவிடினும் - அவரால் நிறுவப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாய் ஓங்கி உயர்ந்து நிற்கிறது என்பது அவர் கண்ட கனவு ஓரளவு நிறைவேறியிருக்கிறது என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். அவரின் உள்ளத்துள் எழுந்த 'இந்து' என்னும் எண்ணக்கருவினைச் சுமக்கும் வகையில், அவரின் கல்லூரியில் உருவான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் - இந்துநாகரிகத்துறையும், சைவசித்தாந்தத்துறையும்,சமஸ்கிருதத்துறையும் சிறப்புடன் இடம்பெற்று இயங்கி வருகின்றன என்பது மனங்கொள்ளத்தக்கதேயாகும். உலகின் எந்தப் பல்கலைக்கழகங்களிலும் அமையாத ஒரு புதுத்துறைதான் 'இந்து நாகரித்துறை'. பொன்னம்பலம் இராமநாதனின் கனவு ஓரளவுக்கு நிறைவேறியே இருக்கிறது என்றும் சொல்லக் கூடியதாக இருக்கிறதல்லவா?

இந்துப்பண்பாடு, நாகரிகம், சைவசித்தாந்தம், வடமொழி, அத்துடன் யோக நெறியினையும் மாணவர்கள் கற்றிடல் வேண்டும் என்று இராமநாதன் அவர்கள் எண்ணினார்கள். அதனையே இலட்சியமாகவும் அவர் கொண்டிருந்தார் என்றும் அறிகின்றோம். அவரின் இலட்சியத்தை நிறைவேற்றும் நிலை நிச்சயமாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்படும். அதற்கான எண்ணப்பாங்கினை உடையவர்கள் நிறையப்பேர் பல்கலைக்கழகத்திலேயே இருக்கிறார்கள் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

ஆண்களுக்காக அமைக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மலர்ந்ததுபோல் - பெண்களுக்காக அமைக்கப்பட்ட இராமநாதன் கல்லூரியின் பகுதியில், யாழ். பல்கலைக்கழகத்தின் இசைத்துறை இயங்குவதும் பெருமைக்குரிய விடயமாக அமைகிறது. இராமநாதன் என்னும் பெயரினை உச்சரித்தால் உயர்கல்விப் பீடங்கள்தான் கண்முன்னே காட்சி கொடுக்கின்றன என்பதை எவருமே மறுத்துரைத்துவிடமுடியாது.

ஆரம்பத்தில் ஆங்கில நாகரிகத்தில் மூழ்கி இருந்தாலும், பின்னர் அவரின் வாழ்க்கை ஆன்மீகத்துள் மூழ்கத் தொடங்கியே விடுகிறது. யோகம், தியானம் என்பவற்றில் மிக்க நாட்டமுடையவராக அவர் இருந்தார். பாடசாலைகளில் அவற்றை மாணவருக்கு அளித்திடுவதற்கும் அவர் வழிசமைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆங்கிலத்தில் கற்று, ஆங்கிலத்தில் புலமைபெற்று, பல அரச உயர்பதவிகளை அலங்கரித்த, பொன்னம்பலம் இராமநாதன் - ஆன்மீகத்தை அகமிருத்தி அதனை வாழ்வாக்கி வாழ்ந்திருக்கிறார் என்பதுதான் மிகவும் முக்கியமாகும். சமய தத்துவங்களை அவர் நன்கு விளங்கியிருந்தார். சைவசித்தாந்தத்தோடு ஏனைய மதங்களின் தத்துவங்களையும் அறிந்தவராய் இருந்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அப்படி அறிந்த படியால்தான் சைவசித்தாந்தம் அவருக்கு அகத்தில் இறுக்கமாய் அமர்ந்திருக்க வேண்டும். சைவசித்தாந்த சமாஜத்தின் முதல் மாநாடு 1906 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வேளை இவர் தலைமை தாங்கினார் என்றால் அதற்குக் காரணம் சைவசித்தாந்தத்தில் இவருக்கு நிறைந்திருந்த புலமையும், நாட்டமுமேயாகும். சுவாமி விவேகானந்தர் வேதாந்தத்தைக் கையிலெடுத்து வெளிநாட்டில் வித்திடச் செய்ததுபோல் - இராமநாதன் கையில் எடுத்தது சைவசித்தாந்தத்தையாகும். இராமநாதனும் வெளிநாடுகளில் சைவசித்தாந்தத்தை விளக்கி உரைகள் ஆற்றிநின்றார் என்பதும் மனமிருத்த வேண்டியதாகும்.

நாவலர் பெருமான் கை காட்டிய இராமநாதன் என்னும் பெருமகனாரும் நாவலர் வழியிலே தமிழையும், சைவத்தையும் மனமிருத்தினார், கல்விச் சாலைகள் நிறுவுவதிலும் முன்னின்றார். தமிழ் இலக்கணத்திலும் வித்தகராயும் விளங்கியிருக்கிறார். அத்துடன் வடமொழியிலும் ஆற்றலுடையவராகவும் விளங்கியிருக்கிறார். அவரின் 'செந்தமிழ் இலக்கணம்' நூல், 'பகவத்கீதா' மொழிபெயர்ப்பு நூல் என்பன நாவலர் வழியில் பயணித்தார் என்பதையே காட்டி நிற்கின்றன.

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் அமைந்திருக்கும் பரமேஸ்வரன் ஆலயம், தலைநகராம் கொழும்பில் அமைந்திருக்கும் பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம், இராமநாதனின் ஆன்மீகத்துக்கு முத்திரை. அத்துடன் தமிழ்நாட்டிலும் கொடைக்கானலில் குறிஞ்சியாண்டார் ஆலயமும் இவரை நினைக்க வைக்கும் விதமாய் இருக்கிறது.

அரசியலிலும் கால்பதித்தார். ஆன்மீகத்திலும் கால்பதித்தார். கல்வித்துறையிலும் தனக்கென ஒரு இடத்தினைப் பெற்று அத்துறையில் ஆழமாய் கால் பதித்தார். சமூகத்திலும் சிறந்த நல்லதொரு ஆளுமையாளராகக் கால் பதித்தார். நாவலர் பெருமான் ஒரு யுகபுருஷர் என்றால் - அவர் சிந்தனையில் மலர்ந்த பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் ஈழமணித்திருநாட்டின் தவப்புதல்வர் என்றுதான் எண்ணிட வைக்கிறது. அந்தத் தவப்புதல்வரான பொன்னம்பலம் இராமநாதன் மிகவும் பொருத்தமாகவே நாவலரின் நம்பிக்கை நட்சத்திரமாய் பிரகாசித்து நின்றார் என்பது மறுக்கமுடியாத உண்மை.

**சிறுவர் சிறுமியர்க்குக் கல்வியிரு கூடம் நிறுவினான் பேர்என்றும் நிற்கும் - பெறும்பெயரார் சென்னைக்குப் பச்சையப்பன் சீர்யாழ்ப்பாணத்துக்கு மன்னும் இராமநாதன்.**

காலைக்கதிர் Kalaikkathir

# காணி சுவீகரிப்புக்கு எதிராகப் போராடியவர்களை கஞ்சா கடத்தினர் எனக் கைதுசெய்த கடற்படையினர்

## மாதகலில் உறவினர்கள் எதிர்ப்புப் போராட்டம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

கஞ்சா கடத்தினர் எனக் குற்றச்சாட்டை முன்வைத்து இருவரைக் கைதுசெய்த கடற்படையினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மாதகலில் கவனவீர்ப்பு போராட்டம் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவரை, கஞ்சா கடத்திய சந்தேகத்தில் கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டவர்களது உறவினர்கள் நேற்று மாதகல் பகுதியில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

குறித்த இருவரும் நேற்று கடலுக்குச் சென்று திரும்பி வரும் வேளையில் கடற்படையினர் அவர்களை வழிமறித்தனர்.

இதன்போது கடற்படையினரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவர்கள் அவ்விடத்தில் நின்ற நிலையில், கடலில் மிதந்து வந்த, சுமார் 276 கிலோ கஞ்சாவை அவர்கள் கடத்தினர் என்று தெரிவித்து கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பயணித்த படகு சிறியது. அந்தப் படகில் தொழில் முதல்கள் இருந்தன. இந்நிலையில், 276 கிலோ கஞ்சாவை எவ்வாறு அந்த படகில் கொண்டு வருவது?

அத்துடன் அவர்கள் பயணித்த படகின் ஜி.பி.எஸ்ஸினைப் பார்த்தால் அவர்கள் எங்கு சென்றுள்ளார்கள்? கஞ்சா கடத்தும் இடத்துக்கு சென்று உள்ளார்களா? எனத் தெரியவரும்.

அத்துடன், கைதுசெய்யப்பட்டவர்களை, நீங்கள் காணி சுவீகரிப்பு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்தானே? எனக் கேட்ட கடற்படையினர், ஈவிரக்கமற்ற முறையில் தாக்கியுள்ளனர்.

இதனை, உறவினர்கள் பார்க்கச் சென்றபோது அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்றுமுன்தினம் இளவாலைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர்.

எனவே, கைதுசெய்யப்பட்டவர்களைச் சரியாக விசாரணை செய்து உண்மைத் தகவலை வெளிப்படுத்த வேண்டும் - என்றனர்.

# சபை அமர்வை நேற்றும் புறக்கணித்த சஜித் அணி



கொழும்பு, டிசெ. 08

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டாவது நாளாக நேற்றும் சபை அமர்வைப் புறக்கணித்தனர்.

சபைக்குள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரையில் நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

இதன்படி நேற்றுமுன்தினம் சபை அமர்வில் கலந்துகொள்வதைத் தவிர்த்த அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் நேற்றும் அதில் கலந்துகொள்ளவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு உரையாற்றுவதற்காக மேலதிக நேரத்தை வழங்காமை தொடர்பில் சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இதன்போது சபைக்குள் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில், மறுநாள் சனிக்கிழமை அது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது தொடர்பாக இணக்கம் காணப்படாத நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியினர் சபை நடவடிக்கைகளைப் புறக்கணிக்கத் தீர்மானித்தனர்.

# இரு நாட்டு உறவுகள் பற்றி ஜெய்சங்கர் - பீரிஸ் சந்திப்பு



இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அபுதாபியில் நடைபெற்ற 5 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றிருந்தபோதே, இருவருக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் குறித்து இருவரும் கலந் துரையாடியுள்ளனர்.

பொருளாதாரத்துறையில் ஒத்துழைப்பு, கலாசாரம் மற்றும் மக்களுக்கிடையிலான முன்முயற்சிகள் மற்றும் பிராந்திய நிறுவனங்களில் கூட்டு முயற்சிகள் ஆகியன தொடர்பில் குறிப்பாகக் கலந்துரையாடப்பட்டது என இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

# கஞ்சா கடத்திய இருவர் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியா, டிசெம். 08

வவுனியாவில் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 145 கிலோ கேரள கஞ்சாவை கடத்திச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கூலர் ரக வாகனத்தை நேற்று வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வழி மறித்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அதில் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அந்த வாகனத்தில் பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 145 கிலோ கேரள கஞ்சாவை மீட்டமையுடன், வாகனத்தையும், அதில் பயணித்த சாரதி உட்பட இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் இரண்டு கோடி ரூபா இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (100)

# வடமேல் ஆளுநரின் உயிரை பலியெடுத்தது கொரோனா



வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே தனது 83ஆவது வயதில் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான அவர், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் சிரேஷ்ட அரசியல்வாதிகளுள் ஒருவரான ராஜா கொல்லுரே, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளராகவும் பதவி வகித்துள்ளார்.

ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பில் அவர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்தால் கட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். எனினும், நீதிமன்றத்தை நாடி இதற்கு இடைக்காலத் தடை உத்தரவை அவர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரண்டரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வி.எஸ்.சிவகரன், மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த கால சிவில் சமூக செயற்பாடுகள், நடத்தப்பட்ட நிகழ்வுகள், குறிப்பாக மாவீரர் தின நிகழ்வுகள் சம்பந்தமாக பல்வேறு கோணத்தில் கேள்விகள் தொடுத்து சுமார் இரண்டரை மணிநேரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்று சிவகரன் தெரிவித்தார்.

இந்த விசாரணைகள் ஊடாக எம்மைச் சிவில் சமூக செயற்பாடுகளில் இருந்து நிறுத்தும் வகையிலும், எமது ஜனநாயகக் குரல்வளையை நசுக்கும் விதமாகவும் அவர்களின் கேள்விகள் காணப்பட்டன என்றும் சிவகரன் மேலும் கூறினார்.

## கட்சிகளின் சுயநல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களின்செயற்பாடுகளில்பிழைகளைக் கண்டு இருக்கலாம். அல்லது அவர்கள் நன்றாகச் செயற்படுகிறார்கள் என மக்கள் மத்தியில் அபிப்பிராயங்கள் ஏற்பட்டு இருக்கலாம். இவற்றை உடைக்க வேண்டுமாயின் அவர்களைத் தோற்கடிக்க வேண்டும்.

கட்சிகளின் சுயநலத்தின் அடிப்படையில்தான் அவை தோற்கடிக்கப்படுகின்றன. தங்களின் கட்சி சார்ந்த தேவைகளுக்காகத் தோற்கடிக்கின்றார்கள்.

உள்ளூராட்சி சபைகளின் காலம் வருகின்ற ஏப்ரல் மாதமளவில் முடிவடையவுள்ள நிலையில், அதனை 6 மாத காலப்பகுதிக்கோ அல்லது ஒரு வருட கால பகுதிக்கோ அந்தச் சபைகளை நீடிக்கக்கூடும் என நிச்சயமாக நம்புகின்றேன். ஏனெனில் இன்றைய களச் சூழலில் அரசு புதிய தேர்தலை நடத்தும் நிலைக்குப் போக மாட்டாது.

ஆகவே, அவ்வாறான சூழலில் உள்ளூராட்சி சபைகளைத் தோற்கடித்து ஆங்காங்கு ஆணையாளரின் கீழ் சபைகள் கொண்டுவரப்படுமாயின், அதைப்போல் ஒரு மோசமான நிலை இருக்காது. எனவே, மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்கள் இருப்பது நல்லது.

வடக்கு மாகாண சபை இல்லாததால், ஆளுநர்கள் வந்து என்ன செய்கின்றார்கள் எனக் கண்களால் பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். அதேபோல் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு இந்தக் கதி ஏற்படுமாயின் , ஒட்டுமொத்தமாக அரசு தான் விரும்பியதைச் செய்யும். அதற்கு நாங்கள் களம் அமைத்து கொடுத்தவர்களாக இருப்போம். ஆகவே, இதுவொரு சரியான நடவடிக்கை இல்லை - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2021 இல் வெளியிடப்பெற்றது.